# குடும்ப வன்முறை தலையீட்டு உத்தரவு விசாரணைக்காக நீதிமன்றத்திற்குச் செல்வது

**இப்போது நீங்கள் ஆபத்தை எதிர்கொண்டால் 000 ஐ அழைக்கவும்**

**நீங்கள் தற்போது ஆபத்தில் இல்லை, ஆனால் பாதுகாப்பற்றதாக உணர்ந்தால், The Orange Door orangedoor.vic.gov.au ஐத் தொடர்பு கொள்ளவும்**

## நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன் கவனிக்க வேண்டியவை

நீதிமன்றத்திற்குச் செல்வது ஒரு சட்டச் செயல்முறையாகும், எனவே நீங்கள் செல்வதற்கு முன் சட்ட ஆலோசனையைப் பெறுவது நல்லது.

Victoria Legal Aid தகுதியான நபர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. தொலைபேசி 1300 792 387

நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன், நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்கள் நீதிமன்ற விசாரணையின் போது, உங்களுக்குக் கடமையிலிருக்கும் ஒரு வழக்குரைஞரின் உதவி தேவைப்பட்டால், நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தவும்
- உங்களுக்கு உரைபெயர்ப்பாளர் தேவை என்றால் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தவும்
- நீங்கள் நேரில் கலந்து கொள்ள முடியாவிட்டால் தொலைபேசி அல்லது வீடியோ வழியாகக் கலந்துகொள்ள ஏற்பாடு செய்யும்படி நீதிமன்றத்தைக் கேளுங்கள்
- உங்களால் விசாரணையில் கலந்து கொள்ள முடியாவிட்டால் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்துங்கள்
- விசாரணையின் போது, உங்கள் பாதுகாப்பு குறித்து உங்களுக்கு ஏதாவது அச்சமிருந்தால், நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றால், காத்திருக்கும் போது, ஒரு பாதுகாப்பான இடத்தில் நீங்கள் காத்திருக்க நீதிமன்றம் ஏற்பாடு செய்யலாம். நீதிமன்றத்தில் உங்களுக்குப் பாதுகாப்பு வழங்க, நீதிமன்றம் ஏற்பாடு செய்யலாம். சில நீதிமன்றங்களில், வீடியோ இணைப்பு மூலம் நீங்கள் சாட்சியங்களை வழங்க முடியும் என்பதால் நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியமில்லை. இதை முன்கூட்டியே ஏற்பாடு செய்ய வேண்டும்.

விக்டோரிய மாநிலத்திலுள்ள நீதிமன்றங்களின் முகவரி மற்றும் தொடர்பு விவரங்கள் Magistrates' Court of Victoria இணையதளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன: mcv.vic.gov.au/going-court/find-court

## விசாரணை நடக்கும் நாளில் கவனிக்க வேண்டியவை

நாள் முழுவதும் அங்கு செலவிட திட்டமிடுங்கள். உங்கள் வழக்கு உடனடியாக விசாரிக்கப்படாமல் போகலாம், எனவே உங்கள் வழக்கு விசாரணைக்கு சில மணிநேரம் காத்திருக்க வேண்டும்.

மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் குழந்தை பராமரிப்பு வசதிகள் இல்லை என்பதால், உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால் அவர்களைப் பார்த்துக் கொள்ள யாரையாவது ஏற்பாடு செய்யுங்கள். நீங்கள் தொலைபேசி அல்லது வீடியோ மூலம் நீதிமன்ற விசாரணையில் கலந்து கொள்கிறீர்கள் என்றால், மற்றும்/அல்லது கடமையிலுள்ள ஒரு வழக்குரைஞரிடம் பேசும்போது உங்களுடன் அறையில் குழந்தைகள் யாரும் இல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.

நீங்கள் எப்படி நீதிமன்றத்திற்கு செல்வீர்கள் என்பதைத் திட்டமிடுங்கள். நீதிமன்றங்களுக்கு அருகில் வாகனத் தரிப்பு நிலையங்களுக்கு அதிக செலவாகும். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது அல்லது யாரையாவது உங்களை அங்கே அழைத்துச் செல்ல வைப்பது நல்லது.

உங்களுக்குக் கூறப்பட்ட நேரத்திற்கு, குறைந்தது 30 நிமிடங்களுக்கு முன்னதாக நீதிமன்றத்திற்கு வர முயற்சிக்கவும்.

நீதிமன்றத்தைப் பாதுகாப்பாக வைத்திருக்க, அனைவரும் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது ஆபத்தான பொருட்கள் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கையாகும்

பாதுகாப்பு சோதனைகளை முடித்துக் கொண்டு நேரடியாக நீதிமன்றத்திற்கு சென்று Registry என்ற பிரிவில் நீங்கள் நீதிமன்றத்தினுள் வந்துள்ளதை அங்குள்ள ஊழியர்களிடம் தெரியப்படுத்துங்கள்.

பின்வரும் தகவல்கள் உள்ளிட்ட, உங்களுக்குத் தேவையான தகவல்களை registryயில் பணியாற்றுபவர்கள் வழங்க முடியும்:

- உங்கள் விசாரணை நடக்கும் நீதிமன்ற அறைக்கு வழி காட்டுதல்
- கடமையிலுள்ள வழக்குரைஞர் உட்பட பிற நீதிமன்ற சேவைகளுக்கு உங்களை வழிகாட்டுதல்

நீங்கள் நீதிமன்றத்தில் பாதுகாப்பற்றதாக உணர்ந்தால், ஒரு பாதுகாவலர் அல்லது அதிகாரியுடன் பேசவும்.

## நீதிமன்றத்திற்கு உங்களுடன் கொண்டு வர வேண்டியவை

- உங்கள் நீதிமன்ற விசாரணை பற்றிய ஆவணங்கள் ஏதேனும்
- பிற நீதிமன்றங்களில் இருந்து உங்களுக்கு அல்லது உங்கள் குழந்தைகள் தொடர்பாகப் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுகள் ஏதேனும்
- அருகாமையில் கிடைக்கும் சிற்றுண்டி, உணவு மற்றும் பானங்கள் என்பவற்றிற்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும்.
- மொபைல் தொலைபேசி சார்ஜர் (charger)
- (கண்ணாடி அல்லாத) தண்ணீர்ப் புட்டி
- உங்கள் விசாரணைக்காகக் காத்திருக்கும் போது, நேரத்தைப் போக்குவதற்காக ஒரு புத்தகம் அல்லது வேறு ஏதாவது

நீங்கள் நீதிமன்றத்தினுள் நுழையும்போதும் வெளியேறும்போதும், மரியாதையின் அடையாளமாக, தயவுசெய்து நீதிபதியை நோக்கி வணங்குங்கள்.

நீதிமன்றத்திற்கு வந்ததும், **இவற்றைத் தவிர்க்கவும்**:

- உண்ண, குடிக்க அல்லது வாயில் மெல்ல
- தொப்பி அல்லது கறுப்புக் கண்ணாடிகளை அணிதல், அல்லது கறுப்புக் கண்ணாடிகளை உங்கள் தலையில் மாட்டி இருத்தல்.

அழைப்புகள் வரும்போது உங்கள் ஃபோன் ஒலி எழுப்பாத நிலையில் வையுங்கள் அல்லது அணைத்து விடுங்கள். அழைப்புகள் வரும்போது உங்கள் ஃபோன் ஒலி எழுப்பாத நிலையில் உள்ளது என்றால், தயவு செய்து அது அதிராது (vibrate) இருக்கும் என்பதையும் உறுதிப்படுத்தவும்.

## நீதிமன்றத்தில் எனக்கு என்ன ஆதரவு கிடைக்கும்?

நீங்கள் எந்த நீதிமன்றத்தில் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. நீதிமன்றத்தில், கடமையிலுள்ள ஒரு வழக்குரைஞர் மற்றும் ஒரு உரைபெயர்ப்பாளர் இருக்கலாம் (உங்களுக்கு ஒருவர் தேவை என்று நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தால்).

குடும்ப வன்முறை விண்ணப்பதாரர்களுக்கு ஆதரவு வழங்க ஒரு பணியாளர் நீதிமன்றத்தில் இருக்கிறார், அவர் உங்களுக்கு சட்டப்பூர்வமற்ற ஆதரவை வழங்க முடியும்.

ஆதரவிற்காக உங்களுடன் ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினரை அழைத்து வர நீங்கள் விரும்பலாம்.

## நீதிமன்றத்தில் எனக்கு உரைபெயர்ப்பு செய்ய ஒருவர் கிடைப்பாரா?

ஆம். தலையீட்டு உத்தரவுக்கான உங்கள் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய உரைபெயர்ப்பாளர் அல்லது உதவி தேவைப்பட்டால், நீதிமன்றத்தை முன்கூட்டியே அழைக்கவும்.

உங்கள் நீதிமன்ற விசாரணைக்கு உரைபெயர்ப்பாளரைப் பணிக்கமர்த்த நீங்கள் விரும்புகிறீர்கள் என்று நீதிமன்றப் பதிவு ஊழியர்களிடம் சொல்ல வேண்டும்.

**உங்கள் கருத்துக்களை நாம் வரவேற்கிறோம்.**
உங்கள் கருத்து அல்லது புகாரைப் பகிர எங்கள் இணையத்தளத்தைப் பார்க்கவும்: womenslegal.org.au

women's legal service victoria

PO Box 13311 Law Courts VIC 8010

**தொலைபேசி** 03 8622 0600

**மின்னஞ்சல்** admin@womenslegal.org.au

Wurundjeri பூர்வீகக் குடி மக்களின் Kulin தேசத்தின் பாரம்பரிய நிலங்களில் Women's Legal Service Victoria அமைந்துள்ளது. இந்த நிலம், நீர் மற்றும் சமூகத்துடன், பூர்வீகக்குடி மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவு மக்களுக்கான தொடர்பு பல்லாயிரம் வருடங்களாகத் தொடர்வதை நாங்கள் அங்கீகரிக்கிறோம் அத்துடன் அவர்களின் கடந்த கால மற்றும் நிகழ்கால பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம். இறையாண்மை ஒருபோதும் கைவிடப்படவில்லை.

பாதுகாப்பான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய ஆதரவை வழங்க Women's Legal Service உறுதிபூண்டுள்ளது.